**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 21-07-2023**

**வேலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-07-21 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-07-22 | 2023-07-23 | 2023-07-24 | 2023-07-25 | 2023-07-26 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 2.0 | 4.0 | 4.0 | 3.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 37.0 | 37.0 | 35.0 | 35.0 | 34.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 27.0 | 26.0 | 24.0 | 24.0 | 24.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 65 | 65 | 75 | 75 | 75 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 45 | 50 | 60 | 65 | 65 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 14 | 14 | 14 | 16 | 16 |
| காற்றின் திசை (கோணம்) | 270 | 270 | 270 | 270 | 270 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 5 | 6 | 6 | 6 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

ஜூலை 23,24,25,26 தேதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 34 முதல் 37 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 24 முதல்27 டிகிரி செல்சியஸ் ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 65 முதல் 75 விழுக்காடாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 45 முதல் 65 விழுக்காடாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகமானது மணிக்கு 14 முதல் 16 கி.மீ வரை மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியை பொறுத்த வரையில் ஜூலை 26 முதல் ஆகஸ்ட் 1, 2023 வரை இயல்பான மழை மற்றும் வெப்பநிலை காணப்பட வாய்ப்புள்ளது. தற்பொழுது நிலவும் சூழ்நிலை காரணமாக பயிர்களில் பூச்சி/ நோய் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே வயலை அவ்வப்பொழுது கண்காணித்து பூச்சியின் தாக்கம் தென்பட்டால் அதற்கேற்ப பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| வரும் நாட்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் பூச்சி மற்றும் பூஞ்சாணகொல்லியுடன் ஒட்டும் திரவம் கலந்து தெளிக்கவும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | பகல் நேர வெப்பநிலை காரணமாக நெற்பயிரில் இலைமடக்கு புழுவின் தாக்கம் தென்படுகிறது. தாக்கத்தின் அறிகுறியாக இலைகள் நீளவாக்கில் மடிக்கப்பட்டிருக்கும், புழுக்கள் இலைகளின் பச்சை நிற திசுக்களை சுரண்டுவதால் இலைகள் வெண்மையாக மாறி காய்ந்துவிடும். தீவிர தாக்குதலின்போது முழு நெல் வயலும் வெண்மையான நிறத்தில் காய்ந்தது போல் காட்சியளிக்கும். இதனை கட்டுப்படுத்த பைபிரினில் 80% WG 20-25 கி/ஏக்கர் அல்லது வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவிகிதம் அல்லது வேப்பெண்ணைய் 0.03 சதவிகிதம் என்ற அளவில் தெளிக்க வேண்டும். |
| நிலக்கடலை | நிலக்கடலையில் பூவை தக்க வைக்கவும், நெற்று நிரப்பவும் மற்றும் வறட்சியை தாங்கும் தன்மையை அதிகரிக்கவும் விதைத்த 35 ம் நாள் ( 50 % பூக்கும் சமயத்தில்) மற்றும் 45ம் நாள் ( காய் முற்றும் பருவம் ) இரண்டு தெளிப்பாக நிலக்கடலை ரிச் எக்டருக்கு 5 கிலோ (ஒவ்வொரு தெளிப்பிற்கும் ) வீதம் தெளிக்கவும். |
| உளுந்து | உளுந்து பூவை தக்க வைக்கவும், மகசூல் அதிகரிக்கவும் மற்றும் வறட்சியை தாங்கும் தன்மையை அதிகரிக்கவும் பூக்கும் பருவத்தில் தெளிப்பாக பயறு ஒண்டர் ஏக்கருக்கு 2 கிலோ 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |
| கரும்பு | வரும் நாட்களில் வேகமான காற்று எதிர்பார்க்கப்படுவதால் 5 மாத கரும்பிற்கு தோகை உரித்து விட்டம் கட்டவும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | தென்னையில் சுருள் வெள்ளை ஈக்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த மஞ்சள் நிற ஒட்டும் பொறிகள் (நீளம் 5 அடி x அகலம் 1.5 அடி ) ஏக்கருக்கு 8 வீதம் 6 அடி உயரத்தில் வைக்க வேண்டும் அல்லது தாக்கப்பட்ட மரங்களில் உள்ள கீழ்மட்ட ஓலைகளின் உட்பகுதியில் படுமாறு விசைத்தெளிப்பான் கொண்டு மிக வேகமாக தண்ணீரை பீச்சி அடிக்கலாம். |
| வாழை | வரும்நாட்களில் காற்றின் வேகம் மணிக்கு 10 கிலோமீட்டருக்கும் அதிகமாக வீசக்கூடும் என்பதால் 5 மாதமுள்ள வாழை மரங்கள் சாயாமல் இருக்க முட்டு கொடுக்க வேண்டும். |
| மாம்பழம் | தற்பொழுது நிலவும் சூழ்நிலை காரணமாக மாவில் இலைப்பேனின் தாக்கம் தென்படுகிறது. இதனை கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் மருந்தை 0.3 மிலி/லிட்டர் என்ற அளவில் தெளிக்க வேண்டும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | கால்நடைகளை அருகிலுள்ள கால்நடை மருத்துவமனைக்கு கொண்டு சென்று கோமாரி நோய்க்கான தடுப்பூசியை செலுத்தி கொள்ள வேண்டும். |
| வெள்ளாடு | செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகளுக்கு PPR என்ற தடுப்பூசியை ஒரு ஆட்டுக்கு ஒரு மி.லி வீதம் தோலுக்கடியில் போட வேண்டும். இந்த தடுப்பூசியை போடுவதால் PPR என்ற நோயின் தாக்கத்தால் ஏற்படும் கழிச்சல், பேதி, காய்ச்சல், சளி மற்றும் இறப்பு ஆகியவற்றை தடுக்கலாம். |